ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

ஸ்ரீகாஞ்சிபுரவரதராசர்

# உற்சவப்பதிகம்.

இஃது

செந்தமிழ்ப்புலவர்

திருநீர்மலை

இராசகோபாலபிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு,

காணியம்பாக்கம்

வேங்கடேசமுதலியார் குமாரராகிய

பொன்னம்பலமுதலியாரவர்களால்

சென்னை:

ஆறுமுகவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஜயஹூ சித்திரைமீ

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

# ஸ்ரீவரதராசர் உற்சவப்பதிகம்.

காப்பு-நேரிசைவெண்பா.

சீராரு மத்திகிரித் தேப்பெருமாள் சேவடிக்குத்............*
தாரார் தமிழ்ப்பதிகஞ் சாத்துதற்குத்—தேரார்............*
மறைத்தமிழ்முன் செய்காரி மாறனுவீறன்...............*
நிறைமலர்த்தா ணெஞ்சே நினை.............................*

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

நீரார்கடற்புவிவிளங்குகச்சிப்பதியி
னீரசன்செய்விழாவில்
நிகழாதிநாட்காலைமண்டலந்தன்னிலே
நிறையுமிருமதியநடுவில்
ஏரார்திவாகரனிருந்தெனப்புவிநீளை
யேந்திழையர்நாப்பண்மகிழ்வோ
டிலகுபொற்சப்பரத்தூர்ந்துவருவரதநின்
னிணையிலாச்சேவையைக்காண்
போரார்பிறப்பரிப்பூமிதனிலுனதுபூம்
பொன்னடிப்புகுவதல்லால்
பொற்சிங்கமேறிவருமன்றிராச்சேவையைப்
புகழ்கல்விதனினிறைந்த

தோராரநந்தனுஞ்சொல்லவசமன்றெனிற்
சிற்றறிவினேன்சொல்வனோ
தீரத்திகிரியத்தநீரத்திகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௧)

மருமலர்த்தொடைகாவதங்கமழ்தரப்பூணின்
மணியொளிவிண்விற்போலவே
வாய்ந்திடப்பல்லியங்கடலெனவொலிக்கவே
மற்றைநாட்காலைதனிலே
ஒருவெள்ளியன்னமேலிலகுமருளாளநின்
னுயர்சேவையைக்கண்டவர்
உலகில்வேறொன்றையுங்காணவுநினைப்பரோ
வுற்றவன்றிரவதனிலே
வருபரிதிநடுவேணோர்கரியஞாயிறுபோல
வளர்சூரியப்பிரபையின்
மருவிவருவரதநின்சேவையென்கன்னிகர்
மனத்தைக்கரைக்குமெனினுன்
திருவடிக்கன்புபுரிபாகவதர்தமதுநற்
சிந்தைதாமென்னுருகுமோ
தீரத்திகிரியத்தநீரத்திகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௨)

மூன்றும்விழாக்காலைபோய்மீளுமன்னமுடன்
முழுமதியிரண்டுதவழும்
முதுமேருவிற்றிவாகரனுதித்தாற்போல
முன்னர்வெண்கவரிவீசச்
சான்றோர்களிருகுடைபிடித்திடப்பல்லியஞ்
சாகரம்போன்முழங்கச்

சதுமறைக்கருடன்மேலூர்வரதவிந்தச்
சழக்கனையுகந்தாளுவாய்
வான்றுரைபோற்பாணமின்னவவ்விரவுபகல்
வர்த்திதீவர்த்தியொளிர்தல்
வயங்குமிருவான்சுடர்களங்கியிவர்போற்றிமுன்
வரிசையாய்நின்றனரெனத்
தேன்றூழ்மலர்க்கைவிற்கோலேந்தியநுமான்
றிருத்தோளிலங்குமாலே
தீரத்திகிரியத்தகீரத்திகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௩)

அப்பரமபதமதனில்யாமிவாறுறுவதென
வடியர்க்குணர்த்துமாபோல்
அநந்தன்மேனன்காம்விழாக்காலைதன்னிலெம்
மன்னையர்களுடன்மேவவே
ஒப்பரியவெள்ளிமலைமேலிருமயூரநடு
வொளிர்சிங்கமுற்றதென்ன
உலவிவருமருளாளவூமையுன்றிருநாம
முரைசெயச்செய்ததேவே
இப்புவியுளந்தணர்களோதுமறைகடலென
விசைக்கவன்றிரவதனிலே
இயைசந்திரப்பிரபையூர்வரதபெண்குழவி
யினையாணெனச்செயரியே
செப்பரியமூடனுமெனையுநின்னடியனுச்
செயனினக்கருமையோதான்
தீரத்திகிரியத்தகீரத்திகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௪)

ஐந்தாம்விழாக்காலைதேனிருவினைமொய்க்கு
மளியினடியார்சூழவே
ஆலவட்டஞ்சிவிறிகொடைமயிற்பீலியுட
னசைகொடிகடருமிருளினை
வந்தாரவொட்டாதகற்றுபொற்றண்டிகையின்
மலர்மகட்கோலமருவி
மண்டபந்தொறுமேவிவருவரதநின்னடியென்
மனத்திற்கிடக்கவருளே
நந்தாமலொளிர்தங்கவாளிமேலன்றிரவி
னலமுடனெழுந்தருளிநின்
கவிலருஞ்சேவையிந்நீசனுக்குற்றவகை
நன்குணரினின்கருணையே
செந்தாமரைக்கண்ணவுயர்வொப்பிலாப்பரம
தேவதேவர்க்கரசனே
தீரத்தகிரியத்தநீரத்தகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௫)

ஆறுவதுச்சவத்திற்காலைசுண்ணமுட
னரிசனப்புனலாடியே
அழகுறுங்கண்ணன்றிருக்கோலமேவிமணி
யாடகச்சப்பரத்தில்
வீறுருமடியார்களுள்ளநெக்குருகியே
விழிகணீர்பெருகியோட
மெய்யவசமுற்றுநின்சீர்பாடியானந்த
வேலைதனின்முழுகிக்கரை
ஏறுதுதொழுதுடன்சூழவருமருளாள
வென்வினையொழித்தாள்வையவ்

விரவினிற்பொற்கசேந்திரன்மீதிலிறையவர்க்
        கிறைவனிவனேயென்னவே
தேருருமறியவொருகுடைநிழற்கீழிலகு
        தேவராசப்பிரானே
தீரத்திகிரியத்தநீரத்திகிரியொத்த
        சீரத்திகிரியத்தனே. (சு)

எண்டிசையிலுள்ளோருமெள்ளிடவுமிடமின்றி
        யெங்கணுநிறைந்தேகத்தவே
எழாம்விழாக்காலைபூமிகிடுகிடுவென்ன
        விலகுகொடிபடபடென்ன
அண்டரூர்புவியெனத்தோன்றிடத்தூளியெழ
        வணிமணிகள்கணகணவென
ஆடகமலைக்குநிகர்தேரூர்ந்துபோர்க்கோல
        மார்ந்துதிருமறுகுலாவி
தண்டலையையேய்ந்துதிருமஞ்சனங்கண்டுபீ
        தாம்பரமுடுத்தணியுடன்
சந்தனம்பூமாலைசாத்தியாராதநங்
        தந்தபின்னமுதுசெய்து
தெண்டனிட்டடியார்வணங்கிடக்கோயில்சேர்
        சீதராவெனையாளுவாய்
தீரத்திகிரியத்தநீரத்திகிரியொத்த
        சீரத்திகிரியத்தனே. (எ)

இங்கிவனைநிகர்தேவுமிதையொத்ததிருநாளு
        மில்லையெனவெட்டாம்விழா
இரவரைப்பொன்னுடைசாத்திமுடியிற்பாகை
        யிலகத்துராயணிந்தே

அங்கிமெய்யிட்டிரமதாணிகண்டிமுத்
தாரமுந்நூலணிந்தே
ஐம்படைகளேந்திவிரலாழியொளிவீசமல
ரம்புயத்தாட்கழல்களோர்
தங்கிடப்பொற்குதிரைநபபிதன்மேலூர்ந்து
சார்வழித்திருமங்கைமன்
சகலமுங்கொள்ளைகொண்டுணர்வினுற்றிருமொழி
தனைப்பாடவுளமகிழ்ந்தே
சிங்கமேந்தியமலர்ச்சயனுதிவாசமது
செய்வரதவெனையாளுவாய்
தீரத்திகிரியத்தநீரத்திகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௮)

மயர்வொழித்திடுகங்கைபன்முறைபடிந்தபயன்
வரதனைக்கங்கைகொண்டான்
மண்டபத்தொருகாற்றுதிப்பதற்கொப்பென்பார்
வாருமங்கெய்தவென்றே
அயர்வுதோன்றாதுவருபாகவதர்புடைசூழ
வாளேந்துபொற்சிவிகைமேல்
அழகிலகவொன்பான்விழாக்காலையூர்ந்தவ்
வநந்தசரசினிலாடியே
உயர்வுபெறவேதீர்த்தமனைவர்க்குமீந்தற்றை
யோங்கிரவினிற்பசும்பொன்
ஒளிமணிப்புண்யகோடிவிமானமதனிலூர்ந்
துலவிவருவரதநலமார்
செயலொன்றியற்றவறியாவெனையுநினதுபூஞ்
சேவடிக்காட்செய்குவாய்

திரத்திகிரியத்தநீரத்திகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௯)

அந்தமுறுபத்தாம்விழாவிலபிடேகமா
யன்புடன்பன்னிரண்டார்
ஆராதநங்கண்டுசேர்புட்பயாகத்தை
யருமறையின்விதிமுடித்தே
நந்தலறவேதுவசவவரோகணஞ்செய்து
நாகர்க்குவிடையருளியே
நல்லரம்பையர்களெழிலாடல்பாடற்குள்ள
நாணநங்கையர்களாடக்
கொந்தவிழலங்கலார்வெட்டிவேர்ச்சப்பரங்
குலவிடவிளஞ்சூரியர்
கோடிபேர்தோன்றினரெனப்பொலிந்தடியார்செய்
குலவரையைநிகர்வினையெலாம்
சிந்தவருமருளாளவரதவென்னிடர்தனைத்
தீர்த்தருள்கடைக்கணித்தே
திரத்திகிரியத்தநீரத்திகிரியொத்த
சீரத்திகிரியத்தனே. (௧௦)

நேரிசைவெண்பா.

தெருளாளர் போற்றுபெருந் தேவியுடன் கச்சி
அருளாளர் வாழி யவனி - மருளாரா
ஆழ்வார்கள் பூதூ ரமலன்சீர் வாழியவவ்
வாழ்வாரு மந்தணர்வாழி.

ஸ்ரீவரதராசர் உற்சவப்பதிகம்

முற்றிற்று.